கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

# TLS 3102 நாட்டாரியல் கோட்பாடுகள்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

01. (அ) விளாடிமிர் பிராப்பின் அமைப்பியல் கோட்பாட்டின் முக்கிய அம்சங்கள் யாவையென்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(ஆ) பிராப்பின் கதைச் செயல்கள் தமிழ் நாட்டார் கதைகளில் இடம்பெறும் தன்மை பற்றி யாதேனுமொரு நாட்டார் கதை/கதைப்பாடலை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

02. 'நாட்டார் வழக்காறுகள் சமூக நிறுவனமாகச் செயற்படுகின்றன' இக்கூற்றை செயற்பாட்டுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

03. 'நாட்டார் வழக்காறு ஒன்றின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதே வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாட்டு ஆய்வின் நோக்கமாகும்' யாதாயினுமொரு நாட்டார் கதை ஆய்வின் ஊடாக இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

04. 'வாய்மொழிப் பாடகன் பாடல் புனைவதற்கு 'வாய்பாட்டை' அடிப்படையானதொரு ஆக்கக் கூறாகக் கொள்கிறான்' என்று கூறலாமா? ஆராய்க.

05. 'நாட்டார் வழக்காறுகள் பல்வேறு அரசியல் கருத்துக்களை உட்கிடக்கையாகக் கொண்டவையாகும். அதன் காரணமாக அவ்வழக்காறுகளைப் பல்வேறு நாடுகளும் தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளன' ஆராய்க.

06. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) மாக்ஸ் முல்லரின் (Max Muller) புராணவியல் கோட்பாடு

(ஆ) வாய்மொழி வழக்காற்றுப் பிரதிகளுக்கும் சூழலுக்கும் இடையிலான உறவு

(இ) இடம்பெயர்தல் கோட்பாடு

(ஈ) புராணக் கதைகளினது பாலியல் குறியீட்டு உள்ளடக்கம்